# இரத்தத்தினாலே விடுதலை பண்ணுவேன். சகரியா 9 : 12

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

**விடுதலை பண்ணுவேன்**

உன்னை நிச்சயமாகவே விடுவிப்பேன் – என்ற வார்த்தைகளுக்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**சங்கீதக்காரனின் ஜெபமாவது சங். 39 : 8,9**

என் மீறுதல்கள் எல்லாவற்றிலுமிருந்து என்னை விடுதலையாக்கும்

**ஏன் இவ்வாறு ஜெபிக்கிறார்.**

**சங். 22 : 4 கூறுகிறது,**

எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள். நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்.

**சங். 34 : 7 கூறுகிறது,**

கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களை சூழப் பாளையம் இறங்கி, அவர்களை விடுவிக்கிறார் – என்பதாக.

**இயேசு கிறிஸ்துவைக் குறித்து ஏசாயா கூறுவது, ஏசா. 61 : 1,2**

சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் . . . துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடையைக் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார். என்பதாக.

சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையை அளிக்கிற தேவன் ''விடுதலை பண்ணுவேன்'' – என்ற வாக்குத்தத்தத்தோடு கடந்து வருகிறார்.

**பக்தன் பாடுகிறார் . .**

விடுதலை முழங்கிடுவோமே விக்கினம் யாவுமகலும்
இடுக்கண்கள் சூழ்ந்திடும் வேளை இரட்சகர் மீட்பருள்வாரே
நுகங்கள் முறிந்திடும், கட்டுகளறுந்திடும்
விடுதலைப் பெருவிழா காண்போம்.
ஆனந்த துதி ஒலி கேட்கும் . . . என்று பாடுவோம்.

இந்த மாதத்தில் அடிக்கடி மேற்கண்ட வரிகளைப் பாடுவோம்.

**மத்தே. 18 : 27 கூறுகிறது,**

அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவர் மனதிரங்கி, அவனை விடுதலை பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்து விட்டான்.

**லூக்கா 13 : 12 கூறுகிறது,**

ஸ்தீரியே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்பதாக.

மேற்கண்ட வசனத்தின்படி, கடனும் மன்னிக்கப்பட்டு, பலவீனத்தினின்றும் விடுதலையை தேவன் கட்டளையிடுவாராக.

**சங்கீதம் 69 : 18,20 கூறுகிறது,**

நீர் என் ஆத்துமாவினிடத்தில் வந்து அதை விடுதலைபண்ணும்; என் சத்துருக்களினிமித்தம் என்னை மீட்டுவிடும். தேவரீர் என் நிந்தையையும், என் வெட்கத்தையும் என் அவமானத்தையும் அறிந்திருக்கிறீர். நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது. நான் மிகவும் வேதனைப்படுகிறேன். எனக்காக பரிதபிக்கிறவன் உண்டோ என்று காத்திருந்தேன். ஒருவனும் இல்லை. தேற்றுகிறவர்களுக்கு காத்திருந்தேன். ஒருவனையும் காணேன் என்பதாக.

நாமும் ஜெபிப்போமா ?

**சங்கீ. 50 : 15 கூறுகிறது,**

ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய் – என்பதாக.

**சங். 91: 14 கூறுகிறது,** அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிற படியால் அவனை விடுவிப்பேன் – என்பதாக.

வசனங்களை மீண்டுமாக சொல்லிப்பார்ப்போம்.

**சங். 107 : 6** :தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார் என்று வேதம் கூறுகிறது.

**நீதி. 11 : 8 கூறுகிறது :** நீதிமான் இக்கட்டினின்று விடுவிக்கப்படுவான்.''

**நீதி. 11 : 21 கூறுகிறது :** நீதிமான்களின் சந்ததி விடுவிக்கப்படும் – என்பதாக.

இந்த மாதம் அடிக்கடி உங்கள் விசுவாசத்தை கீழ்க்கண்டவாறு அறிக்கை செய்யுங்கள்.

**சங். 54 : 7** : கர்த்தர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி, என்னை விடுவித்தார்

**கீழ்க்கண்டவாறு பொருத்தனை செய்வோமா?**

சங். 119 : 34 மனுஷர் செய்யும் இடுக்கத்தினின்று என்னை விலக்கி விடுவித்தருளும். அப்பொழுது நான் உம்முடைய கட்டளைகளைக் காத்துக்கொள்வேன் – என்பதாக.

**இயேசு சொன்னார் . . .**

**யோவான் 8 : 32** : சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

**யோவான் 8 : 36** : குமாரன் விடுதலையாக்கினால், மெய்யாகவே விடுதலையாவீர்கள்.

**2 கொரி. 3 : 17** : கர்த்தரே ஆவியானவர், கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுண்டு.

**நாம் செய்ய வேண்டியது என்ன?**

**ரோமர் 6 : 7, 11 கூறுகிறது,**

மரித்தவன் பாவத்துக்கு நீங்கி, விடுதலையாக்கப்பட்டு இருக்கிறான். அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.

**விடுதலையாவதினால் உண்டாகும் பலன்?**

**ரோமர் 6 : 22 கூறுகிறது, :** இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினாலே பரிசுத்தமாகுதல், உங்களுக்குக் கிடைக்கும் பலன். முடிவோ நித்திய ஜீவன்.

கர்த்தருடைய பிள்ளைகளே,

கீழ்க்கண்டவாறு நாம் ஒருமித்து தேவனைத் துதிப்போம்.

இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம் – என்பதாக.

**நீங்கள் எந்தக் காரியத்தில் அடிமையாக இருக்கிறீர்கள்?**

குடியா, கடன் தொல்லையா, வியாதியா, சூனியமா, நஷ்டமா, எதிர்பார்ப்பா? ஏமாற்றமா?

**"விடுதலை பண்ணுவேன்" –** என்று வாக்கு அருளுகிறார். ஆமென்.

**பக்தன் பாடுகிறார்.**

விடுதலை நாயகன், வெற்றியைத் தருகிறார்
எனக்குள்ளே இருக்கிறார், என்னே ஆனந்தம்.
நான் பாடிப்பாடி மகிழ்வேன்,
தினம் ஆடி, ஆடி துதிப்பேன்.

மேற்கண்ட பாடலை இந்த மாதத்தில் அடிக்கடி பாடுங்கள். துதியுங்கள்.

கர்த்தர் கூறுகிறார்

**இரத்தத்தினாலே விடுதலை பண்ணுவேன். ஆமென்.**